<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3, தாராபுரம்</u>
<u>மோட்டார் வாகன விபத்து உரிமைக்கோரிக்கை தீர்ப்பாயம், தாராபுரம்</u>

**<u>MCOP No.110/2022</u>** 16.04.2025 **ம.சா.1**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி (மோ.வா.வி.உ.கோ.தீ) தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பொன்மணி | தொழில் | |
| க/பெ | முத்துச்சாமி | கிராமம் | |
| வயது | | தாலுகா | |
| ஜாதி | | மாவட்டம் | |
| சமயம் | | | |

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

2ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் புகைப்பட நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது ம.சா.ஆ.16, 3–ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் புகைப்பட நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது ம.சா.ஆ.17. மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்தில் சம்பந்தப்பட்டதாக கூறப்படும் **TN 88 C 5326** என்கிற லாரி விபத்து சமயத்தில் மூன்றாம் எதிர்மனுதாரிடம் காப்பீடு செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் மனுவில் குறிப்பிட்டுள்ள காப்பீட்டு என்ன ஆனது **TN 88 C 5326** என்கிற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்திற்கு வழங்கப்பட்ட காப்பீட்டு எண் என்று சொன்னால் சரியல்ல. இரண்டாம் எதிர்மனுதாரர் தன்னுடைய நான்கு சக்கரவாகனத்தை இரண்டு சக்கர வாகனமாக காட்டி வசந்தகுமார் என்பவர் மூலம் ஒரு மோசடியான காப்பீட்டை பெற்றுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள காப்பீடு மூன்றாம் எதிர்மனுதாரை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல.

2. இரண்டாம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு மூன்றாம் எதிர்மனுதாரர் விபத்து சமயத்தில் எந்த விதமான காப்பீடும் வழங்காத சூழ்நிலையில் மூன்றாம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. இது போலியாக ஏற்படுத்தப்பட்ட பாலிசி என்பதால் தான் இரண்டாம் எதிர்மனுதாரர் இதுவரையில் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள காப்பீட்டை பொருத்தும் மேற்படி வசந்தகுமார் மீது மூன்றாம் எதிர்மரார் நிறுவனத்தின் சார்பாக புகார் அளிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை:- இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.04.16 19:50:08 +0530

3-ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.

<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3, தாராபுரம்</u>
<u>மோட்டார் வாகன விபத்து உரிமைக்கோரிக்கை தீர்ப்பாயம், தாராபுரம்</u>

**<u>MCOP No.110/2022</u>** 16.04.2025 **ம.சா.2**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி (மோ.வா.வி.உ.கோ.தீ) தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | பாலசுப்பிரமணி | தொழில் |
| த/பெ | சந்திரசேகர் | கிராமம் |
| வயது | | தாலுகா |
| ஜாதி | | மாவட்டம் |
| சமயம் | | |

<u>முதல் விசாரணை</u>

சத்தியமாக சொல்கிறேன். நான் இந்த வழக்கில் மனுதாரர் தரப்பு 2 வது சாட்சி. பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும், அவற்றை தெரிந்து கொண்டு தான் நான் அதில் என் கையொப்பங்களை போட்டுள்ளேன்.

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.04.16 19:50:15 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.